செய்தி வெளியீடு எண்: 293 நாள்: 30.04.2018

# செய்தி வெளியீடு

## <u>தினமணி செய்தித்தாளில் 30/4/2018ஆம் நாளன்று வெளியான தமிழ் மொழி தவிர்க்கப்பட்டிருப்பது ஏன்? என்ற தலைப்பின் கீழ் வெளியான செய்திக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் மறுப்பு அறிக்கை.</u>

மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள குடியரசுத்தலைவர் விருதுகள் அறிவிப்பில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதாக ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் வாயிலாக செய்திகள் வந்துள்ளன.

தமிழ் மொழிக்கு மட்டுமே 2004ம் ஆண்டில் செம்மொழித் தகுதி வழங்கப்பெற்றது. இதனைத்தொடர்ந்து, கர்நாடக மாநிலம் மைசூரில் மத்திய இந்திய மொழிகள் நிறுவனத்தின் வழியாக செயல்பட்டு வந்த தமிழ்ப் பிரிவு பிரிக்கப்பட்டு சென்னையில் தமிழுக்கென தனி நிறுவனமாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்ற பெயரில் 2008ஆம் ஆண்டு மே மாதம் முதல் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் தன்னாட்சி பெற்ற நிறுவனமாகும்.

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் இந்நிறுவனத்தால் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. **தொல்காப்பியர் விருது – ஒருவருக்கு**

   (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை)

2. **குறள் பீட விருது – இருவருக்கு**

   1. அயல்நாட்டவர், 2. அயல்நாடு வாழ் இந்தியர்
   (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை),

3. **இளம் அறிஞர் விருது – ஐந்து பேருக்கு**

   (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை)

2005–2006 ஆண்டு முதல் 2015–2016 ஆண்டு வரை 66 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தமிழுக்கென செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் நிறுவப்பட்டுள்ளதைப் போன்று, மத்திய அரசால் செம்மொழி என்று அங்கீகரிக்கப்பட்ட பிற மொழிகள் ஒரியா, கன்னடம், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகும். மேலும், சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம், அராபிக், பாரசீகம் போன்ற மொழிகளுக்கு இவ்வாறு தனி நிறுவனம் அந்தந்த மாநிலங்களில் தன்னாட்சி அளிக்கப்பெற்று அமைக்கப்படவில்லை. மாறாக, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் கிளை அலுவலகங்களாக மட்டுமே இயங்கி வருகின்றன. எனவே, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை, மேற்கண்ட மொழிகளுக்கான விருதுகளுக்கு விண்ணப்பங்கள் பெற விளம்பரம் வெளியிடுகிறது.

**30.04.2018** நாளிட்ட தினமணி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மகரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் (MBVS) விருதுக்கு நிகராக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் **தொல்காப்பியர் விருதும், குறள்பீட விருதும்** வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வழியாக விளம்பரங்கள் வெளியிடப்பட்டு, இவ்விருதுகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உரிய தெரிவுக் குழுவால் விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய அரசின் அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, விருதாளர்களுக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவரால் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**2013–14, 2014–15, 2015–16** ஆகிய மூன்றாண்டுகளுக்கும் சேர்த்து **2017**ஆம் ஆண்டில் மேற்கண்ட விருதுகள் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டுள்ளன.

**2016–17**ம் ஆண்டு விருதுகளுக்கான விளம்பரங்கள் தேசிய மற்றும் மாநில செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு, விருதுகளுக்கான விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன. இதற்கான தெரிவுக் குழு நியமிக்கப்பட்டு விருதாளர்களை தேர்ந்தெடுக்க செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து அளிக்கப்பட்டது மட்டுமன்றி, தன்னாட்சி அளிக்கப்பெற்ற செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலம் குடியரசுத் தலைவர் விருதுகள் வழங்கப்படுவதால் குடியரசுத் தலைவர் விருதுகள் அறிவிப்பில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதாக வெளியான செய்திகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**